RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd2423

# Religion in Silapathikaram

## சிலப்பதிகாரத்தில் சமய நெறி

**S. Chithra** [a, *]

[a] Department of Tamil, Government Arts& Science College, Kozhinjampara, Chittur, Palakkad, Kerala, India.

*Corresponding author Email: chitras@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2423

Received: 05-02-2024; Revised: 21-04-2024; Accepted: 07-05-2024; Published: 16-05-2024

**Abstract:** Silapathikaram, with the epithet 'Nenjayallum Silapathikaram', is hailed as the foremost of the five epics. It is a copy created by Muthamizil offering three types of charity to the world. This book composed by Ilangovadi describes the life of two elders named Govalan Kannagi. Though Ilangovadigal is said to have been a Jain, this epic is regarded as a communist epic. It contains information about all the gods. The purpose of this article is to briefly explain the religious concepts found in this book.

**Keywords:** Silapathikaram, Ilangovadikal, Govalan, Kannagi

**Language:** Tamil

## முன்னுரை

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்ற அடைமொழியோடு விளங்கும் சிலப்பதிகாரம் ஐம்பெரும் காப்பியங்களுள் முதன்மையானதாகப் போற்றப்படுவதாகும். மூன்று வகையான அறக்கருத்துக்களை உலகோருக்கு வழங்கி முத்தமிழால் உருவாக்கப்பட்ட காப்பியமாகும். இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட இந்நூல் கோவலன் கண்ணகி என்னும் இரு தலைமக்களின் வாழ்வினை எடுத்துக் கூறுகிறது. இந்நூலில் காணக்கிடைக்கும் சமயக் கருத்துக்களை சுருக்கமாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சிலப்பதிகாரத்தில் சமயக் கருத்துக்கள்

இக்காப்பியத்தை இயற்றிய இளங்கோவடிகள் சமண சமயத்தைச் சார்ந்தவர் எனக் கூறப்பட்டாலும் இந்நூல் ஒரு பொதுவுடைமைக் காப்பியமாகவேப் போற்றப்படுகிறது. எல்லாக் கடவுள்களைப் பற்றிய செய்திகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

## கோயில்களும் வழிபாடுகளும்

சமய நம்பிக்கையின் ஒரு பகுதியே கோவில் வழிபாடாகும். புகார் நகரிலும், மதுரை நகரிலும் பலவகையான கோயில்கள் இருந்ததாக சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. சிவன், திருமால், முருகன், பலராமன் போன்ற கடவுள்களின் கோயில்கள் இருந்தன.

"பிறவா யாக்கைப் பொரியோன் கோயிலும்
அறுமுகச் சேவ்வே ளணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாயிலோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்" (Saminathaiyar, 2018)

இருந்ததாக சிலம்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் வச்சிரக் கோட்டம், கற்பகக் கோட்டம், கைலாயம், வேல் கோட்டம், இந்திர விகாரம், சூரியக் கோவில், மாசாத்தன் கோயில், அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் ஆகியோர் வாழும் கோயில் போன்றவையும் இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. (சரவணகுமாரன், 2009)

“அமரர் தருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம்

புகார் வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல் வாயில்

உச்சிக் கிழான்கோட்ட மூவர்க்கோட்டம் வேற்கோட்டம்

வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்க்கோட்டம்

நிக்கந்தக் கோட்டம், நிலாக் கோட்டம்” (Saminathaiyar, 2018)

இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. சமணம், பௌத்தம், வைதீகம் முதலான சமயச் சார்புடன் கூடிய சமூக நிலையை உணர்த்துகிறது.

மேலும் சமயச் சார்பான நாளங்காடி பூதம், சித்திர மண்டபம், வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், செடுங்கல் நின்ற மன்றம், பாவை மன்றம் போன்றவை பற்றியும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவை எல்லாம் மக்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டவையாகும். தவறு செய்தால் கடவுள் தண்டிப்பார் என்ற பயத்தையும், நல்வழி நடந்தால் கடவுள் அருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் மக்கள் மனதில் கொண்டு வாழ இவை வழி செய்தன (Saravanakumaran, 2009).

அது மட்டுமின்றி தெய்வத்தன்மை வாய்ந்த சோமகுண்டம், சூhரிய குண்டம், பவகாரணியம், இட்டசித்தி, புண்ணிய சரவணம் போன்றவை இருந்திருந்தததையும் சிலப்பதிகாரம் கூறுகிறது. சமண, பௌத்தத் துறவிகள் இருந்த அறம் வளர்த்த இடங்களும் சுட்டப் பட்டுள்ளன. கண்ணகி தான் கண்ட தீய கனவு பற்றி தன் தோழி தேவந்தியஜடம் கூறும்பொது அதற்குப் பாரிகாரம் கூறும் தேவந்தி,

“கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றின்

மடலவிழ் நெய்தங் கானற் றடமுள

சோமகுண்டஞ் சூhரியகுண்டந் துறைமூழ்கிக்

காமவேள் கோட்டந் தொழுதார் கணவரோடு

தாமின் புறுவார்” (Saminathaiyar, 2018)

என்று கூறுவதன் மூலம் கடவுளைத் தொழுது புனித நீராடினால் பாவங்கள் விலகி நன்மை நடக்கும் எனும் நம்பிக்கை மக்களிடையே நிலவியிருந்ததை அறியமுடிகிறது.

## நதி வழிபாடு

நதியைக் கடவுளாக வழிபடுவதும், புனித நீராடுவதும் சிலம்பிலும் காணப்படுகிறது. கங்கை, காவிhரி, வைகை, பொருனை போன்ற நதிகளில் மக்கள் புனித நீராடியதாகச் செய்திகள் வருகின்றன. காவிரி, வையை போன்ற நதிகளின் கரைகளின் திருமால் கோயில்கள் இருந்ததைக் காண முடிகிறது. புகார் நகரை ஒட்டிய காவிரியில் நீர்த்துறை இருந்ததையும், அது தெய்விகத் தன்மையுடையது என்றும் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

“மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்

ஆயிரத் தோரெட் டரசுதலைக் கொண்ட

தண்ணறுங் காவிhரித் தாதுமலி பெருந்துறைப்

புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி

மண்ணக மருள வானகம் வியப்ப

விண்ணவர் தலைவனை விழுமி நீராட்டி" (Saminathaiyar, 2018)

என்று இந்திர விழாவின்போது இந்திரன் சிலையை காவிரியில் புனித நீராட்டிய செய்தி கூறப்படுகிறது. மேலும் பத்தினி வழிபாட்டிற்காக கோயில் கட்டும்போது கல்லை புனித நீராட்டிய செய்தியும் காணப்படுகிறது.

"ஒற்கா மரபின் பொதியி லன்றியும்

விற்றலை கொண்ட வியன்பே hரிமணத்துக்

கற்கால் கொள்ளினுங் கடவு ளாகும்

கங்கை கேர் யாற்றினுங் காவிரிப் புனலினும்

தங்கிய நீர்ப்படை தகவோ வுடைத்தென" (Saminathaiyar, 2018)

என்னும் செய்தி வருகிறது. நதியைக் கடவுளாக வழிபடுதலையும், நதிநீர் புனித நீராகக் கருதப்படுதலும் சமயச் சார்புடைய செய்திகளாக அமைகின்றன.

## விழா எடுத்தல்

தெய்வ நம்பிக்கையின் ஒரு பகுதிதான் கடவுள்களுக்கு விழா எடுத்தலாகும். கடவுள்களுக்கு வழிபாடு செய்யவில்லை எனில் அவர் தண்டிப்பார் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவி இருந்தததை அறிய முடிகிறது. கொற்றவைக்கு பலி கொடுக்கவில்லையெனில் அவள் வெற்றி தரமாட்டாள் என்று வேடர்களிடையே நம்பிக்கை நிலவியதை,

"கலையமர் செல்வி கடனுணி னல்லது

சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்"

எனும் செய்தி குறிக்கிறது (Saminathaiyar, 2018).

இந்திர விழா, பத்தினி வழிபாடு போன்ற விழாக்கள் நடந்ததை சிலம்பு கூறுகிறது. சிலம்பில் இந்திர விழா தொடக்கமாக பல்வேறு கடவுளர்க்கு படையல் கொடுக்கும் வழக்கம் காணப்படுகிறது. சாதம, ஊன் கலந்த உணவு, கள், மலர்கள் எனப் பலவகை கொடைகள் கொடுக்கப்படுன்றன. முதிய மகளிர் துணங்கைக் கூத்து, குரவைக் கூத்து முதலியன ஆடி வழிபடுகின்றனர். கூத்தன் ஒருவன் அருள் வரப் பெற்று பசியும் பிணியும் நீங்கி மக்கள் வாழட்டும் என்று வாழ்த்துகிறான்.

"தேவர் கோமுன் னேவலிற் போந்த

காவற் பூதத்து கடைகெழு பீடிகைப்

புழுக்கலும், நோலையும், விழுக்குடை மடையும்

பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து

துணங்கையர் குரவைய ரணங்கெழுந் தாடிப்" (Saminathaiyar, 2018)

எயினர்கள் தம் தலையைத் தாமே அரிந்து தம் அரசன் வெற்றி பெற வேண்டி நாளங்காடி பூதத்திற்கு பலியாகக் கொடுக்கின்றனர்.

மருவூர் மருங்கின் மறக்கொள் வீரரும்

பட்கெ மருங்கில் படைகெழு மாக்களும்

முந்தச் சென்று முழுக்கலி பீடிகை

வெந்திற மன்னற் குற்றதை யொழிக்கெனப'

பலிக்கொடை புரிந்தோர் வலிக்குவரம் பாகென (Saminathaiyar, 2018)

இத போலவே சித்தரை மண்டபம், இலஞ்சி மன்றம், தோரணவாயில், பட்டி மன்றம், பூதச் சதுக்கம், பாவை மன்றம் போன்ற மன்றங்களிலும் பலிக் கொடை நடத்தப்பட்டன். அனைத்து பலி நிகழ்வுகளும் முடிந்தபின் இந்திரனுடைய வெள்யானை மன்றத்தில் முரசு முழங்கி வழா நிகழ்ச்சி அறிவிக்கப்பட்டது.

நகரெங்கும் விழாக் கோலம் பூண்டது. மக்கள் நகரைப் பலவிதமாக அலங்கரித்தனர். வைரம், வைடூரியங்கள் பதிக்கப்பட்ட தங்க மேடை மேல் பவளத் தூண்கள் அமைக்கப்பட்டு விழா மண்டபம் அமைக்கப்பட்டது. முன்புறம், எண்வகை மங்கலப் பொருட்களால் ஆன மகரத் தோரணம் கட்டப்பட்டது. தெருக்கள் முழுதும் முளைப் பாலிகை, நிறைகுடம், பசுங்கொடிகள், அவண'சாமரம், சுண்ணம் முதலானைவை நிரப்பப்பட்டன.

மங்கல நெடுங்கொடி வானுற வெடுத்து

மரகத மணியொடுவயிரங் குயிற்றிப்

பவளத் திரள்காற் மைம்பொன் வேதிகை

நெடுநிலை மாளிகைக. கடைமுகத் தியாங்கணும்

கிம்புரிப் பகுவாய்க் கிளர்முத் தொழுக்கத்து

மங்கலம் பொறித்த மகர வாசிகைத்

தோரண நிலைஇய தோமறு பசுமபொற்

பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை

பாவை விளக்குப் பசும்பொற் படாகை

தூமயிர் கவாரி சுந்தரச் சுண்ணத்து

மேவிய யகொள்கை வீதியிற் செறிந்தாங் (Saminathaiyar, 2018)

அதன் பிறகு ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும், இளவரசர்களும், பிற உயர்பதவி வகிப்போரும் தம் தம் வாகனங்களில் ஏறி வந்தனர். அவர்கள் அரசனின் வெற்றிக்கொடியை ஏந்திய வண்ணம் 1008 கலசங்களில் கொண்டு வரப்பெற்ற புனித நீரால் இந்திரனை நீராட்டினர். தொடர்ந்து, சிவன், திருமால:. முருகன், பலராமன், எண்வகை வசுதேவர்கள், 11 வகை உருத்திராகள் , 12 வகை சூத்திரர்கள், 16 வகை தேவர்கள் போன்றோர்க்கு முறைப்படி வழிபாடுகள் நடத்தப்பட்டன.

“தண்ணறுங் காவிரிரித் தாதுமலி பெருந்துறைப்

பண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி

மண்ணகம மருள வானகம் வியப்ப்

விண்ணவர் தலைவனை விழுமி நீராட்டிப்

………………………………………………

………………………………………………

மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅது

சால்வகைத் தெவரு மூவறு கணங்களும்

பால்வைகத் தொரிந்த பகுதித் தோற்றத்து

வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்” (Venkatasamy Nattar, 2001)

அதைத் தொடர்ந்து சமண, பொளத்தத் துறவிகள் உறையும் இடங்களில் நல்லறம் போதிக்கப்பட்டது. அனைவருக்கும் பலவகை பரிசுகள் வழங்கப்பட்டன. பகையரசர்கள் விடுதலை பெற்றனர். பாணர்கள் யாழ் மீட்டி இசை பாட மக்கள் கேட்டு மகிழ்ந்திருந்தனர்.

இந்திர விழாவின் போது மாதவி நடனமாடுகிறாள். கொடுங்கொட்டி, பாண்டரங்கம், அல்லியத் தொகுதி, மல்லாடல், குடக்கூத்து, துடி, குடைக் கூத்துக்கள், பேடிக்கூத்து, மரக்காலாடல், பாவைக்கூத்து, கடையக்கூத்து முதலிய பதினொரு வகையான ஆடல்களை அவள் ஆட புகார் நகரமே அதைக் கண்டு களிக்கிறது.

"அவரவ ரணியுட னவரவர் கொள்கையின்

நிலையுமு் படிதமு நீய்கா மரபிற்

பதினோ ராடலும் பாட்டின் பகுதியும்

விதிமாண் கொள்கையின் விளங்கக் காணாய்

தாதவிழ் ம்பொறி லிருந்தியான் கூறிய

மாதவி மரபனி மாதவி யிவளென" (Venkatasamy Nattar, 2001)

மாதவியின் ஆடலை ரசித்து மக்கள் அனைவரும் மகிழ்வெய்தினர். இவ்வாறு இந்திர விழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

## முடிவுரை

கடள் நம்பிக்கை, அதற்கான வழிபாட்டுத் தலங்கள், அவற்றுள் செய்யப்படும் வழிபாட்டு முறைகள், திருவிழாக்கள் இவையெல்லாம் சமய நம்பிக்கையின் அடிப்படைகளாக அமைகின்றன. அந்த அடிப்படையில் சிலப்பதிகாரத்தில் இதுபோன்ற சமயக் கருத்துக்கள் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன.

## References

Saminathaiyar, U.V. (2018) Silapathikaram Moolamum Arumputhauraiyum Adiyarku Nalluraiyum, U.Ve.Sa Nool Nilayam, Chennai, India

Saravanakumaran, (2009) Tamilar Kaval Theivankal, Alagu Pathippagam, Chennai, India

Venkatasamy Nattar, N.M. (2001) Silapathikaram Moolamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

S. Chithra, Religion in Silapathikaram, Indian Journal of Multilingual Research and Development, Vol 5, Iss 2, (2024) 13-17. DOI: https://doi.org/10.54392/ijmrd2421